JCCSD, Trichy

735

**துணை ஆணையர்(மாநிலவரிகள்), கரூர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: டாக்டர்.க.சி.சு.அருணாபாரதி பி.வி.எஸ்சி.,**

ந.எ.414/2019/அ4 நாள்:29.11.2019

- 2 DEC 2019
13786
திருச்சிராப்பள்ளி
திருச்சிக் கோட்டம்

பொருள்: பொதுப்பணிகள் - நேரடி நியமனம் - மாநிலவரித்துறை - கரூர்(மாவ) மாவட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி -4 பணிகள் - 2015-16, 2016-17 மற்றும் 2017-18 தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் - இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வு - தெரிவு செய்யப்பட்டவர்கள் - கரூர் (மாவ) மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் - இளநிலை உதவியாளர்களாக பணிநியமனம் செய்யப்பட்டவர்கள் - இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கம் செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை, கடித எண்-1330/PSD-G1/2019, நாள்:18.02.2019.
2. இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களின் செயல்முறைகள் ந.எ.14988/2018/ஆ2, நாள்:25.02.2019.
3. துணை ஆணையர்(மாவ), கரூர் அவர்களின் செயல்முறைகள் ந.எ.414/2019/அ6, நாள்:26.02.2019.

-0-0-0-

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தொகுதி-4 பணிகள், தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான போட்டித் தேர்வு-2015-16, 2016-17 மற்றும் 2017-18ல் நேரடி நியமனத்தில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் இணை ஆணையர் (மாவ), திருச்சிக் கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி, கரூர் (மாவ) மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்ட கீழ்காணும் நபர்கள் அவர்கள் இளநிலை உதவியாளர்களாக பணியில் சேர்ந்த நாளினில் (கலம்-5ல் கண்டுள்ளவாறு) இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்பட்டும், தகுதிகாண்பருவம் தொடங்கியும் ஆணையிடப்படுகிறது.

| வ.எ. | பெயர் மற்றும் பதவி திருவாளர்கள் | பணியேற்ற அலுவலகம் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | S.M.ரம்யா, இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர் (மாவ), அலுவலகம், கரூர்(தெற்கு) | துணை ஆணையர் (மாவ) அலுவலகம், கரூர். | 26.02.2019 பிற்பகல் |
| 2. | K.இலக்கியா, இளநிலை உதவியாளர் | மாநிலவரி அலுவலர் அலுவலகம், மணப்பாறை | மாநிலவரி அலுவலர் அலுவலகம், மணப்பாறை | 26.02.2019 பிற்பகல் |
| 3. | P.மதிவதனா, இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர் (மாவ), அலுவலகம், கரூர்(கிழக்கு) | உதவி ஆணையர் (மாவ), அலுவலகம், கரூர்-2 | 27.02.2019 பிற்பகல் |
| 4. | C.சோனியா ஜெனீபர் , இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர்(மாவ), அலுவலகம், அரியலூர் | உதவி ஆணையர்(மாவ), அலுவலகம், அரியலூர் | 27.02.2019 முற்பகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | P.பானுப்பிரியா, இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர் (மாவ), அலுவலகம், கரூர்(மேற்கு) | உதவி ஆணையர் (மாவ), அலுவலகம், கரூர்-1 | 26.02.2019 பிற்பகல் |
| 6. | P.மணிமேகலை, இளநிலை உதவியாளர் | மாநிலவரி அலுவலர் அலுவலகம் ஜெயங்கொண்டம் | உதவி ஆணையர் (மாவ), அலுவலகம், கொடுமுடி | 26.02.2019 பிற்பகல் |
| 7. | M.ஜீவிதா, இளநிலை உதவியாளர் | மாநிலவரி அலுவலர் அலுவலகம் துறையூர் | மாநிலவரி அலுவலர் அலுவலகம் துறையூர் | 27.02.2019 முற்பகல் |
| 8. | P.ரெங்கநாதன் , இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர்(மாவ) (செய), கரூர் | உதவி ஆணையர் (மாவ), அலுவலகம், காங்கேயம் | 26.02.2019 பிற்பகல் |

2. தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் விதி 32(a)(i)ன்படி மேற்கண்ட இளநிலை உதவியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்த மூன்றாண்டுகளில், இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவ காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்யப்பட வேண்டும்.

3. இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினில் தேர்ச்சி பெற வேண்டும்.

4. மேற்கண்ட இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து வழங்கப்பட்ட இவ்வாணை, தொகுதி -4 பணிகள் 2015-16, 2016-17 மற்றும் 2017-18ல் பணிநியமனம் தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள அனைத்து நீதிப்பேராய மனுக்கள் மீதான தீர்ப்பாணைகளுக்குட்பட்டது.

5. உரிய பதிவுகள் தனியாளரின் பணிப்பதிவேட்டினில் மேற்கொள்ள உரிய அலுவலகத்தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-க.சி.சு.அருணாபாரதி,
துணை ஆணையர் (மாநிலவரிகள்),
கரூர்.

பெறுநர்
மேற்கண்ட இளநிலை உதவியாளர்கள் -உரிய அலுவலகத் தலைவர்கள் மூலமாக -
- துணை ஆணையர்(மாவ),திருச்சி(ஊரகம்) மூலமாக -

நகல்: இணை ஆணையர் (மாவ), ஈரோடுகோட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: இணை ஆணையர் (மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: துணை ஆணையர்(மாவ), திருச்சி(ஊரகம்)
நகல்:1.உதவி ஆணையர்(மாவ),கரூர்-1/கரூர்-2/ காங்கேயம்/கொடுமுடி/அரியலூர்
2.மாநிலவரி அலுவலர், மணப்பாறை/துறையூர்
உபரி-1

//உண்மைநகல்/உத்தரவுப்படி//

S. Arun 28.11.19
மாநிலவரி அலுவலர்/மேலாளர்

28/11/19